Chundikuli Branch Library

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 17 முறை 17 இதழ் 235
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-10-1985

## எட்டு நாள் பாதயாத்திரை இன்றுடன் முடிகிறது

(அலுவலக நிருபர்)

சிறைச்சாலைகளிலும் இராணுவ முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய் அல்லது விசாரணைக்குட்படுத்து என்ற கோரிக்கையை முன் வைத்து பாதயாத்திரைசெய்து வந்த யாழ். பல்கலைக்கழக

(5-ம் பக்கம் பார்க்க)

## வவனியா தாக்குதலில் சோவியத் குண்டுகளாம்

(வவனியா)

தாக்குதலுக்குள்ளான வவனியா பொலிஸ் நிலையக் கட்டிட இடிபாடுகளுக்குள்ளிருந்து சோடலிகள் உட்பட ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட குண்டுகளும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளும் மீட்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய)

# திடீர் முற்றுகையில் மீனவர் பலி!

# விசுவமடுவில் சம்பவம்

(ஏ வி மாணிக்கம்)

விசுவமடுப் பகுதியில் உள்ள பிரமந்தன் ஆற்றுப்பகுதியை நேற்றுக் காலை சுற்றி வளைத்த ஆயுதப்படையினர் திடீர்ச் சோதனை நடத்தி பொழுது இடம் பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் மூன்று மீனவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், தருமபுரம் 'இலக்கம் 2' அரசினர் பாடசாலை வெளியில் தேகப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவர்கள் மீது 'ஹெலிகொப்டர்' மூலம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் களோ-காயங்களோ ஏற்படவில்லை என்றும் கூறப்படுகின்றது! இதன் பின்னர் இப்பாடசாலையின் முற்றத்தில் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டனவாம்

நாளை வெள்ளிக்கிழமை இப் பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெறுவதை முன்னிட்டு, தேகப்பயிற்சிகள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இரு உத்தியோகத்தர்கள் இப் பகுதியில் உள்ள காட்டுப்பாதையால் சைக்

(5-ம் பக்கம் பார்க்க)

### கிரிக்கெட் முத்திரை

(கொழும்பு)

இலங்கை வின் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் வெற்றியை கௌரவிக்கும்முகமாக முத்திரை ஒன்றை வெளியிட அமைச்சரவை நேற்று அங்கீகாரம் அளித்தது

## தொண்டமான் இன்று தமிழகம் செல்கிறார்

### தமிழ்க் குழுக்கள் — ராஜீவ் சனிக்கிழமை சந்திப்பு

(கொழும்பு)

கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இன்றிரவு சென்னை செல்கிறார்

சென்னையில் தங்கியிருக்கும் போது, இலங்கை இனப் பிரச்சினை சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட செயல்திட்ட அறிக்கை, உத்தேச மூன்றும் சுற்று சமரசப் பேச்சுக்கள்

(5ம் பக்கம் பார்க்க)

### கொள்ளையைக் கண்டித்து——

### ஊழியர், தொழிலாளர்

## இன்று வெளிநடப்பு

(மன்னார்)

மன்னாரில் உள்ள 'சாமுவேல் அன் சம்பனியின் நீர்வழிபோசுகத்திட்ட அலுவலகங்களில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து இன்று 40 உத்தியோகத்தர்களும், 200 தொழிலாளர்களும் அலுவலகங்கள் முன்பாகக்கூடி ஆர்ப்பாட்ட வெளிநடப்புச் செய்யவுள்ளனர்

கம்பனிக்குச் சொந்தமான 2 சிறிய வாகனங்கள், ஒரு மோட்டார் சைக்கிள் ஏற்கனவே கடத்தப்பட்டதாகவும் நேற்று நண்பகல் முருங்கன் தொழிற்சாலையிலிருந்து 'மொறி-கிறெய்ன்' ஒன்று

(8 ம் பக்கம் பார்க்க)

### சீனி கசக்கிறது!

(கொழும்பு)

சீனியின் விலை ஒருகிலோ 1 ரூபா 65 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது

இந்த அதிகரிப்பின் மூலம் இதுவரை 11 ரூபா 40 சதமாக மொத்த விலையில் விற்கப்பட்ட சீனியின் விலை 13 ரூபா 05 சதமாக உயர்ந்துள்ளது

இந்த உயர்வு உடனடியாக அமுலுக்குவருகிறது.

### நால்வர் பலி!

(திருகோணமலை)

சாம்பல்தீவில் ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குடும்பஸ்தர் நால்வர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது

(5ம் பக்கம் பார்க்க)

### நீண்ட இடைவெளியின் பின்னர்

## இராணுவம் வீதிக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் நேற்றுக்காலை சுமார் நாலரை மாதத்திற்குப் பின்னர் முதல் தடவையாக இராணுவத்தினர் கவசவாகனங்கள் ட்ரக்குகள் பின்தொடர, முக்கிய வீதிகள் வழியாக நடைபவனியாக வந்தபோது பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று அதிகாலை 5-30 மணிக்கு கோட்டை முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர், ஆஸ்பத்திரி வீதி, பலாலி வீதி வழியாக வந்தனர்.

திருநெல்வேலி அரசடி வீதி வழியாக நேற்றுக்காலை நடைபவனியில் வந்துகொண்டிருந்த இராணுவத்தினர் அவ்வழியால் வந்த இளைஞரொருவரை விசாரணைக்குட்படுத்தினர்

நேற்றுக்காலை மேற்படி நபர் யாழ் நகரிலுள்ள கடைக்கு பத்திரிகைகளுடன் கடையில் வேலைசெய்யும் சிறுவனையும் ஏற்றிக்கொண்டு சைக்கிளில் வந்ததாகவும், அரசடி வீதியால் திரும்புகையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

## நாளை ஹர்த்தால்

### அனுஷ்டிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆள், வாகனக்கடத்தல், கொள்ளைகளைக் கண்டித்து நாளை வெள்ளிக்கிழமை கடையடைப்பு ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு யாழ் முஸ்லிம்களின் ஏழு இயக்கங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஆள் வாகனக்கடத்தல், கொள்ளைகளை ஆட்சேபித்து

(5-ம் பக்கம் பார்க்க)

### வீதி தகர்ப்பின் எதிரொலி

## துப்பாக்கிச் சூட்டில் சிலர் பலி!

(வவனியா)

வவனியா நகரிலுள்ள விமானரக்குச் சமீபத்திலுள்ள வீதி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதால், போக்குவரத்துதடைப் பட்டது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சிலர் பலியாகியுள்ளதாகவும், மற்றும் சிலர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது

சடலங்கள் வவனியா ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப் பட்டுள்ளன.

லொறி ஒன்றில் வந்த 8 முஸ்லிம்களும் காயமடைந்து அநுராதபுரத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ச)

## வவனியா சம்பவம்:

### 'ரெலோ' உரிமை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

வவனியா பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 'தமிழீழ விடுதலை இயக்கம்' (ரெலோ) உரிமைகோரி அறிக்கை ஒன்றை நேற்று விடுத்துள்ளது.

'தமிழீழ அரசியல் குழு' இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"தமிழீழப் போராட்டத்தால் சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்குவாரத்தை நிறுத்தும் நோக்குடன் விடு

(5-ம் பக்கம் பார்க்க)

### பெண் பார்க்க யாழ். புறப்பட்டவர்

## வவனியாவில் சூட்டுக்குப் பலியானார்!

(யாழ்ப்பாணம்)

திருமணம் பேசி முற்றாக்கிப் பெண் பார்க்க யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டு வந்தவர் வவனியா நகரில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்!

திருநெல்வேலியைச் சேர்ந்த கே சுந்தரலிங்கம் (33 வயது) என்பவரே பலியானவராவார். இவர் வவனியா வ. பி போ. ச. டிப்போவில் பாதுகாப்பு ஊழியராகப் பணியாற்றிவந்தார்.

இவருக்குத் திருமணம் பேசி முற்றாக்கிப் பெண் பார்ப்பதற்கு நேற்று முன்தினம் செவ்வாய் மாலை 4 மணிக்கு ஏற்பாடு

(5-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

நட்டச்சு இயந்திரம் இம்பீரியல் - போட்டபிள் - ஆங்கிலம், காலை 11-00— மணி 1-00 மணி வரை. ஸ்ரீ முருகன்ஸ் (எவர் சில்வர்), 140, கே கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

1037

வெல்டிங் டிரான்ஸ்போமர், எலெக்றிக் றிவெற், வேலை மேசை, உபகரணங்கள் விற்பனைக்குண்டு: தி. வேலுப்பிள்ளை (ஜே பி ), வல்வெட்டித்துறை.

1032

புத்தம் புதிய National NV 870 EN டெக் ஒன்று விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்க: குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665

[1008]

## விற்பனைக்கு

வீட்டிலிருந்து உடைத்து எடுக்கப்பட்ட கல், மண், மக்கி சுமார் 100 ட்ராக்டர் லோட் கொண்டது விற்பனைக்குண்டு நேரில் தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு: பொ த கனகரத்தினம், 605/1 (365). கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

1023

### வாடகைக்கு

இறு குடும்பத்துக்கு புதிய பங்கு வீடு, புறம்பான அடுக்களை, மலகூடம், குளியலறை உண்டு. வாடகை விபரம் நேரில்: 12, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

1034

### இலவசம்

"விவசாயக் கைநூல்" பெற விரும்புவோர் தபாற் செலவுக்காக ரூ 5/- முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம் த. பெ 17 மில்க்வைற், யாழ்ப்பாணம்.

1028

## எமது புதிய வெளியீடு

தியாகராஜன் — அம்பிகா

"எரிமலை" (Pyramid Master)

ஆனந்தபாபு — ஜீவிதா

"இளமை" (Pyramid Master)

விஜயகாந் — நளினி

"ஈட்டி" (Pyramid Master)

சுரேஷ் — நளினி

"எங்கள் குரல்" (Pyramid master)

குணம் வீடியோ சென்ரர்,

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665 (1031)

## மணப்பந்தல்

யாழ்: இந்து வேளாளகுல எலக்ரோனிக்ஸ் எஞ்சினியர் H. N. D. பாஸ் பண்ணி மேல் படிப்பு படித்துக் கொண்டு இங்கிலாந்தில் வேலை பார்த்து வரும், செவ்வாய் தோஷ மற்ற 32 வயதுடைய தமது மகனுக்கு பெற்றோர் அதே குலத்தைச் சேர்ந்த (A/L or Graduate) படித்த அழகுள்ள 26 வயதுக்குட்பட்ட பெண்ணைத் தேடுகிறார்கள். கூடிய விரைவில் விண்ணப்பிக்கவும்! விளம்பர இல: 1029, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்

1029

யாழ்ப்பாண இந்து வேளாள குல. கூட்டுத் தாபனத்தில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்றமற்ற அழகிய மணப் பெண்ணுக்கு 33 — 40 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். விளம்பர இல: 1036, C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம்.

1036

## இலங்கை மின்சாரசபை முக்கிய அறிவித்தல்

1985-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 06-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணி முதல் மாலை 5 30 மணிவரை அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, நெடுங்கேணி ஆகிய பகுதிகளுக்குரிய மின்விநியோகம் தடைப்படும் என்பதை அறியத்தருகின்றேன். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகிறேன்.

நன்றி:

மின்பொறியியலாளர்.
கிளிநொச்சிப் பிரதேசம்,
மாங்குளம்.

981

## அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கலை இலக்கிய வட்டத்தின் திரு எஸ் விஸ்வரத்தினம் எழுதிய "ஆறுகளும் முகங்களும்" என்ற நூல் அறிமுக விழா யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் திரு. பி. நடராசன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நூலின் முதற்பிரதியை திரு. வி. கே. ராஜரட்ணம் திரு. எம். சிவராசாவுக்கு வழங்கினார்.

இவ் விழாவில் யாழ்: பல்கலைக்கழக மெய்யியல் விரிவுரையாளர் திரு. எஸ் கிருஷ்ணராசா, ஆங்கில விரிவுரையாளர் திரு. எஸ் பத்மநாதன் உட்பட பலர் ஆய்வுரைகள் வழங்கினர். (ச

## காந்திக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

மகாத்மா காந்தி பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். பெரியாஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள காந்திசிலைக்கு அறவழிப் போராட்டக்குழுவின்சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நேற்றுக்காலை அறவழிப் போராட்ட குழு உறுப்பினர்களான திருவாளர்கள் டாக்டர் ப. சசிதரன், வி ஜி தங்கவேல் எஸ் சண்முகநாதன் ஆகியோர் மலர் மாலைகளை அணிவித்தனர் யாழ் பெரியாஸ்பத்திரியிலுள்ள காந்தி உருவப் படத்துக்கும் இக்குழுவினர் மலர் மாலைகளை அணிந்து வணங்கினர். [ஐ]

## விற்பனையாகின்றது!

## குழந்தைகளுக்கான ஆரம்ப விஞ்ஞானம்

ஆண்டு5:- தரம் 4 ரூ 13-50 ஆண்டு4:- தரம் 3 ரூ 10-00

[புதிய பாடத்திட்டத்திற்கானது]

வெளியீடு: ஞானசுரபி புத்தகக் கம்பனி,

2 7, மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம் [1025]

## சோவியத் புத்தகங்களின் கண்காட்சியும், விற்பனையும்

இடம்: தெல்லிப்பளை ப. நோ கூ. சங்க மண்டபம்

காலம்: 5 6-10 85 சனி, ஞாயிறு
[இரு நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை]

- சிறுவர் நூல்கள்,
- சோவியத் நாட்டு இலக்கியங்கள்
- புனை கதைகள்

மற்றும்

- விஞ்ஞானம் ★ தொழில்நுட்பம்
- கணிதம் ★ அரசியல்

போன்ற பல்வேறு துறை சார்ந்த நூல்கள் படிக்கவும், பரிசளிக்கவும், பேணிக்காக்கவும் உகந்தவை.

**மக்கள் பிரசுராலயம்,**

40, சிவன் கோவில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண அபிவிருத்தி சபையின் கேள்வி அறிவித்தல் — 1986

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கடைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை 1986-ம் ஆண்டு தை மாதம் 1-ந்திகதி தொடக்கம் 1986ம் ஆண்டு மார்கழி மாதம் 31ந் திகதி வரை குத்தகைக்கு வாடகைக்கு விற்பனை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 17-10-85 ந் திகதி நண்பகல் 12 மணிவரை யாழ் அபிவிருத்திச் சபைச் செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றிற்குரிய கேள்விப் பத்திரங்கள் உரிய தொகையைச் செலுத்திய பின்னர் அவ்வவ் உப அலுவலகத்தால் 15-10-85ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். மூலப்பிரதி யாழ் அபிவிருத்தச் சபை தலைமை அலுவலகத்திலும், இணைப்பிரதி உரிய அலுவலகத்திலும் 17-10-85-ம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் பற்றிய முழு விபரங்களையும் கேள்விப் பத்திரப் பெறுமதி, கேள்விப் பிணைத் தொகை ஆகிய விபரங்களையும், கீழ்காணும் உப அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளவும்.

மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ். அபிவிருத்திச் சபை.

யாழ்: அபிவிருத்திச் சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1985-09-30.

### உப அலுவலகங்களின் பெயர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) | ஊர்காவற்றுறை, | (02) | மானிப்பாய்பட்டணம், | (03) | உரும்பிராய் - ஊரெழு, |
| (04) | உடுப்பிட்டி, | (05) | நாரந்தனை, | (06) | மல்லாகம், |
| (07) | மானிப்பாய்க் கிராமம், | (08) | ஏழாலை, | (09) | உடுவில், |
| (10) | கோப்பாய், | (11) | அனலைதீவு, | (12) | நெடுந்தீவு, |
| (13) | வேலணை, | (14) | எழுவைதீவு, | (15) | காரைநகர் வடக்கு, |
| (16) | அராலி, | (17) | காரைநகர் தெற்கு, | (18) | கட்டைவேலி, |
| (19) | குடத்தனை, | (20) | நாவற்குழி, | (21) | முள்ளிப்பற்று, |
| (22) | இரணைதீவு, | (23) | புலோலி, | (24) | சங்கானை, |
| (25) | பண்டத்தரிப்புபட்டணம் | (26) | காங்கேசன்துறை, | (27) | சுன்னாகம், |
| (28) | நெல்லியடி, | (29) | கிளிநொச்சி, | (30) | கொக்குவில் |
| (31) | நல்லூர், | (32) | தெல்லிப்பழை, | (33) | மயிலிட்டி, |
| (34) | அச்சுவேலி, | (35) | நீர்வேலி, | (36) | சுளிபுரம், |
| (37) | புலோப்பளை, | (38) | நயினாதீவு, | (39) | வட்டுக்கோட்டை, |
| (40) | மண்டைதீவு, | (41) | அக்கரைப்பிட்டி, | (42) | புங்குடுதீவு, |
| (43) | பண்டத்தரிப்புக்கிராமம் | (44) | புத்தூர், | (45) | செம்பியன்பற்று, |
| (46) | கச்சாய், | (47) | கைதடி, | (48) | மிருசுவில், |
| (49) | வரணி, | (50) | சாவகச்சேரி, | (51) | பூநகரி, |
| (52) | பல்லவராயன்கட்டு, | (53) | கரைச்சி, | (54) | முகமாலை, [1017] |

## 10-வது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

மேரி கிருபையம்மா இராஜக்கோன்



மலர்வு:

05-08-1917

உதிர்வு:

03-10-1975

அன்பினால் எம்மவரை ஆட்சி கொண்டாய்
பண்பினால் பற்பலரை ஈர்த்தெடுத்தாய்
பாசமதை எங்களுக்குப் பகிர்ந்தளித்தாய் — எமைப்
பரிதவிக்க விட்டு நீ மட்டும் சென்றதென்ன?
நீ பிரிந்து சென்றிங்கே ஆண்டு பத்தானாலும்
உன் நினைவு உள்ளத்தில் பல்லாண்டாய் உயிர்வாழும்.

அன்புப் பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு, ஏழாலை;
யாழ்ப்பாணம்; (914)

### இரு நாடுகளைக் கடந்துசென்று—

# டுனீஸில்பி.எல்.ஓ. தலைமையகம்மீது

# இஸ்ரேல் விமானத் தாக்குதல்!

## 66 பேர் பலி; யாஸீர் அரபாத்மீது குறிவைக்கப்பட்டதாம்!!

லண்டன். அக். 2

**வட ஆபிரிக்க நாடான டுனீஸில் நேற்று முன்தினம் இஸ்ரேலிய போர் விமானங்கள் கோரத்தாக்குதலொன்றை நடத்தின. டுனீஸில் உள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமையகம் மீது இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 66 பேர் கொல்லப்பட்டனர் பி. எல். ஓ தலைவர் யாஸீர் அரபாத் குடியிருந்த இல்லமும் தரைமட்டமாக்கப்பட்டது.**

இஸ்ரேலின் இத்தணிகரத் தாக்குதல் எகிப்து, லிபியா ஆகிய இருநாடுகளையும் கடந்து சென்றே டுனீஸின் மேற்கொள்ளப் பட்டது. சுமார் எட்டு இஸ்ரேலிய போர் விமானங்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் மூன்று இஸ்ரேலியர்கள் சைப்பிரஸ்தீவில் பாலஸ்தீனப் போராளிகள் என்று கருதப்பட்ட மூவரினால் கொலை செய்யப்பட்டனர். இதற்குப் பதிலடியாகவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதென இஸ்ரேலிய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நிலப்பரப்பு, கடல், ஆகாயப்பிரதேசங்களைக் கடந்து இஸ்ரேல் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

டுனீஸ் நாட்டிலுள்ள பாலஸ்தீன தலைமையகத்தையும், அதனருகேயுள்ள பி எல். ஓ. தலைவர் யாஸீர் அரபாத்தின் இல்லத்தையும் தாக்குவதே இஸ்ரேலின் பிரதானமாக இருந்துள்ளது.

இத்தாக்குதலில் யாஸீர் அரபாத் கொல்லப்படலாம் எனவும் இஸ்ரேல் எதிர்பார்த்தது. ஆனால் அவர் தாக்குதல் நடந்த சமயம் அங்கிருக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் டுனீஸ் பொலிஸார் சிலரும் கொல்லப்பட்டுள்ளனர். இதுதவிர ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 66 பேர் பலியானார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

திடீரெனத் தாழப்பறந்து வந்த இஸ்ரேலிய விமானங்கள் பி எல். ஓ. தலைமையகம்மீது குண்டு வீசியதும் பலத்த சத்தத்துடன் தீச்சுவாலையும் புகை மண்டலமும் கிளம்பின என்று இத்தாக்குதலை நேரில் பார்த்தோர் தெரிவித்தனர்

1982-ம் ஆண்டு தென் லெபனான் பகுதியினுள் இஸ்ரேலியப் படைகள் ஊடுருவி பி எல். ஓ குடியிருப்புக்களை தாக்கின. இதனையடுத்து லட்சக்கணக்கான பாலஸ்தீனர் டுனீஸியாவுக்கே அகதிகளாகச் சென்று குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது (இ)

அணிசேரா இயக்கத்தின் நாடான இந்தியா, மற்றும் சோவியத் யூனியன், மேற்கு-கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்பனவும், அரபு நாடுகளும் இத்தாக்குதலைப் பலமாகக் கண்டித்துள்ளன.

ஐ நா: வின் பாதுகாப்புச் சபையை இத்தாக்குதல் விடயமாக உடனடியாகக் கூடும்படி டுனீஸ் வேண்டியுள்ளது.

## இஸ்ரேலின் சரியான நடவடிக்கை!
### றீகன் கூறுகிறார்

வாஷிங்டன், அக்-2

"டுனீஸில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் ஒரு சரியான நடவடிக்கையே. பயங்கரவாதம் எவ்வடிவில் எங்கிருந்தாலும் ஒழிக்கப்படவேண்டும்" என்று அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

டுனீஸில் இஸ்ரேலிய தாக்குதல் குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு றீகன் மேலும் கூறியதாவது:-

"இஸ்ரேல் சரியான இலக்கையே தெரிவுசெய்து தாக்கியுள்ளது. இத்தாக்குதல் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான சரியான பாடமாகும். எங்கும், எவ்வடிவில் பயங்கரவாதம் தோன்றினாலும் அதனை உடனடியாக முறியடிக்கவேண்டும்" என்றார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு ஷுல்ஸ் இத்தாக்குதலை, நியூயோர்க்கில் நடந்த மாநாடொன்றில் வரவேற்றுப் பேசினார். அம்மாநாட்டில் அரபுப் பிரதிநிதிகளே கலந்துகொண்டனர் "சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு இத்தாக்குதல் ஒரு சிறந்த படிப்பினையாகும்" என்று அவர் குறிப்பிட்டார். (இ)

உலகச் செய்திகள்

## "டுனீஸ்வந்த இஸ்ரேல் விமானங்கள்
# அமெரிக்க தளங்களிலேயே எண்ணெய் வார்க்கப்பட்டது!"
### —அரபாத் தகவல் !!

டுனீஸ், அக்-2

"டுனீஸ் பி எல் ஓ தலைமையகம்மீது நடத்தப்பட்ட இஸ்ரேலிய விமானத் தாக்குதல் அமெரிக்காவின் ஒத்தாசையுடனேயே மேற்கொள்ளப்பட்டது" என்று பி எல் ஓ தலைவர் யாஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்

"இஸ்ரேலிய போர் விமானங்கள் மத்திய தரைக் கடலிலுள்ள அமெரிக்கத் தளங்களில் தரித்து நின்றே டுனீஸ் வந்து இத்தாக்குதலை நடத்தியுள்ளன. இந்நீண்ட தூரப்பயணத்துக்கு அமெரிக்கத் தளங்களிலேயே அவற்றுக்கு 'எண்ணெய் வார்க்கப்பட்டுள்ளது'" என்றும் அவர் குறிப்பிட்டார்.

டுனீஸ் தாக்குதலை அமெரிக்கா பாராட்டியிருப்பதையும் அரபாத் கண்டித்துள்ளார் நேற்று பிரெஞ்சுத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இக்கண்டனங்களை வெளியிட்டார்.

யாஸீர் அரபாத் டுனீஸில் இத்தாக்குதலின்போது சேதமான தமது இல்லத்தையும் பார்வையிட்டார். இவருடன் இவரது முக்கிய உதவியாளர்களும், இயக்கப் பிரமுகர்களும் இத்தாக்குதலில் உயிர் தப்பியுள்ளனரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஜோர்தானிலும் தாக்குதல் நடத்தப்படலாம்?

ரெல்அவிவ், அக்-2

டுனீஸில் மேற்கொண்ட தாக்குதலைப்போல ஜோர்தானிலும் இஸ்ரேல் தாக்குதலை நடத்தலாம் என அஞ்சப்படுகின்றது. ஏனெனில் அங்கும் டுனீஸ் போன்ற பாலஸ்தீன அமைப்புக்கள் உள்ளன.

ஆனால் இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு இத்தகவலை நிராகரித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சு கருத்து வெளியிட்டிருப்பதாவது:- "டுனீஸில் பாலஸ்தீன கெரில்லாக்கள் கட்டுமீறிச் செயல்பட சுதந்திரம் இருந்தது. ஆகையினாலேயே அங்கு அவர்களைத் தாக்கவேண்டியிருந்தது. ஆனால் ஜோர்தானில் பாலஸ்தீனர்கள் கட்டுப்பாட்டினுள் வைக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவிக்கப்பட்டது.

தென் லெபனானிலிருந்து விரட்டப்பட்ட பாலஸ்தீனர்கள் ஜோர்தானின் மேற்குக் கரையிலும் பெருமளவு குடியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### மித்தரோனின் நடு நிலை
## றீகன், கோபச்சேவ் விருப்பங்களுக்கு மறுப்பு!

(பாரிஸ் அக் 2)

அமெரிக்க அதிபர் வாஷிங்டன் வரும்படி விடுத்த அழைப்பை பிரெஞ்சு அதிபர் மித்தரோன் ஏற்க மறுத்துள்ளார்

சோவியத் அதிபர் கோபச்சேவுடன் நடக்கப்படவுள்ள உச்சிமகாநாடு பற்றி ஆராயவே அமெரிக்கா வரும்படி ஜப்பான், பிரான்ஸ், பிரிட்டன், மே. ஜேர்மனி, இத்தாலி, கனடா ஆகிய நாடுகளை திரு. றீகன் அழைத்திருந்தார்.

திரு. றீகனின் இந்த அழைப்பைத் தம்மால் தற்போது ஏற்கமுடியாதென அறிவித்த திரு மித்தரோன், தமக்குச் சாதகமான வேறொரு வேளையில் அமெரிக்கா வருவதாகவும் அந்த அழைப்புக்குப் பதிலளித்துள்ளார்

இதேவேளை சோவியத் தலைவர் திரு கோபச்சேவின் விருப்பத்தையும் பிரெஞ்சு அதிபர் மித்தரோன் நிராகரித்துள்ளார்.

திரு. கோபச்சேவ் அமெரிக்காவின் ஆயுதப் பெருக்கம், இராணுவ நடவடிக்கைகளை கண்டித்து ஒரு கூட்டறிக்கையொன்றைத் தம்முடன் சேர்த்து வெளியிடும்படி கேட்டிருந்தார். ஆனால் திரு மித்தரோன் இந்த விருப்பத்தையும் நிராகரித்தார்.

திரு: கோப்சேவ் பிரான்ஸிற்கு சோவியத் அதிபரான பின்னர் முதல் தடவையாக விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

### இந்தியா முழுவதிலும்———
## விமரிசையாக காந்தி ஜனனதினம்!

புதுடில்லி அக் 2

மகாத்மாகாந்தியடிகளின் 116-வது ஜனனதினம் இந்தியா முழுவதிலும் நேற்று வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது

புதுடில்லியில் காந்திசமாதியுள்ள 'ராஜ்காட்டி'லும் குஜராத்தில் காந்தியடிகளின் சபர்மதி ஆச்சிரமத்திலும் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் மிகவும் களைகட்டியிருந்தன

ஜனாதிபதி ஸெயில்சிங், பிரதமர் ராஜீவ்காந்தி, உபஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் ஆகியோர் உட்பட பல மாநில ஆளுநர்களும் முதலமைச்சர்களும் காந்தியடிகளின் ஜனன வைபவங்களில் கலந்து சிறப்பித்தனர்.

பல நல்வாழ்வுத் திட்டங்கள் வீடமைப்புத் திட்டங்கள், ஹரிஜனமக்கள் புனர்வாழ்வு திட்டங்கள் என்பன ஆரம்பித்து வைக்கப்பட்டன.

திரைப்பட நிகழ்ச்சிகள், புகைப்படக் கண்காட்சிகள், இசை மற்றும் கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இந்தியா முழுவதிலும் நடத்தப்பட்டன (இ)

### லெபனானில் கடத்தப்பட்ட
## 4 சோவியத் பிரஜைகளில் இருவர் கொலை?

பெய்ரூட், அக்-2

நேற்று முன்தினம் பெய்ருட்டில் கடத்திச் செல்லப்பட்ட நான்கு சோவியத் பிரஜைகளில் இருவர் கொல்லப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது ஆயினும் லெபனான் அரசு இதனை ஊர்ஜிதப்படுத்தவில்லை.

கடத்தல்காரர்களால் கொலையுண்ட ஒருவர் சோவியத் டாக்டராம். சோவியத் தூதரக வர்த்தகப் பிரதிநிதியும் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்பட்டது.

வட லெபனானில் சுனி முஸ்லிம் பிரிவினருக்கும், மலேஷ் முஸ்லிம் பிரிவினருக்குமிடையிலான மோதலை சோவியத் யூனியன் தூண்டிவிடுவதாக கூறியே சுனி முஸ்லிம் தீவிரவாதிகள் இக்கடத்தலை மேற்கொண்டுள்ளனர்

சோவியத் ஆதரவு பெற்ற சிரியாவின் துணையுடன் மலேஷ் முஸ்லிம் பிரிவினர் சுனி முஸ்லிம்களுடன் மோதலில்

(7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

அந்த விநோதமான விடுதலை உணர்ச்சியும் நாணமும், அறிவான தீர்மானங்கள் செய்தவர்களுக்கு வருகின்றன.

— ஸ்டீபென் வின் செண்பெனட்

# நமது நோக்கு

## 'வரிகளுக்கிடையில்' வஞ்சனை வித்துக்கள்

பத்திரிகைகளுக்கு ஒழுங்காகக் கட்டுரை எழுதுபவர் பற்றி வாசகர்கள் ஜாக்கிரதையாக இருப்பது நலம்.

ஜாக்கிரதை என்ற சொல்லை அக்காலத்தில் தென் இந்திய றெயிலில் முதன்முதல் கண்டது நினைவுக்கு வருகிறது.

'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற எச்சரிக்கை இலங்கையிலிருந்து போகும் யாத்திரிகர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது.

எங்கள் சிஜீஆர் தானும் இவ்வித எச்சரிக்கைக்கு 'ஜாக்கிரதை' (சுத்த தமிழில்லாவிட்டாலும்) சுவையான சொல.

பத்திரிகை உடமைக்காரர்கள் நிறையப்பணம் கொடுப்பார்கள் செல்வாக்குப் பெருகும் பெரும் அரசுகளை ஆட்டிவைக்கும் வாய்ப்புத்தானும் கிட்டும்; இவற்றைக்காரணமாகக் கொண்டு விசேட கட்டுரைகள் வரையும் எழுத்தாள நிபுணர் எல்லோரும் உறுதிகுலையாத கொள்கைக்காரர் என்று ஏமாந்து விடலாகாது.

எங்களுக்கு மாறான ஒருவர் எங்களை அடுத்துக் கெடுப்பவரானால் அவருடைய பகைமையைப் பணம் கொடுத்தாவது வாங்கிவிடவேண்டுமென்கிறார் தமிழ் முனிவர்.

கொழும்பில் வெளியாகும் ஆங்கிலத் தினசரி ஒன்றில் குல்டிப் நாயர் என்றொரு பிரபல எழுத்தாளர் வாரமொன்றுக்கு - பொதுவாக சனிக்கிழமைகளில் "பாக்கு நீரிணைக் கடாக" என்ற தலைப்பில், இந்திய - இலங்கை விவகாரங்கள் பற்றி எழுதி வருகிறார். வாசகர்களின் சிந்தனையைக் கவரும் வகையில் எழுதப்படும் கட்டுரைகள் இவை.

ஆங்கிலத்தில் "Between The Lines" வரிகளுக்கிடையே என்ற கருத்தில் எழுதப்படுவது மிகப் பொருத்தமானது.

பரந்த அரசியல் ஞானமும் அதனை எழுத்தில் வடிக்கும் திறமையுமுடையவரான திரு. குல்டிப் நாயர் பரிமாறும் கருத்துக்கள் மேல்வாரியாக வாசிப்பவர்களுக்கு புலப்படாது.

இங்கிலாந்தின் பிரதமராக நான்கு முறை அரசு செலுத்திய கிளாட்ஸ்டன் ஒரு பெரிய எழுத்தாளன்; ஆனால் எவருடைய அழைப்புக்கோ, கோரிக்கைக்கோ பிரசார எழுத்தில் ஈடுபடுவதில்லை. நாம் குறிப்பிடும் இந்த எழுத்தாளர் எழுதும் கட்டுரைகள் நிதானமான அவபோல் நடனம் செய்கின்றன.

கட்டுரை ஆசிரியரின் கோரிக்கைக்கு கட்டுப்பட்டு வரிகளுக்கிடையில் தொக்கு நிற்கும் எண்ணங்களைச் செவ்வனே புரிய முடியுமானால் இந்திரா ஆட்சியும் அதனைத் தொடரும் ராஜீவின் ஆட்சியும் மிகநுணுக்கமாக தாக்கப்படுகின்றன.

ஆங்கிலச் சொல்லாட்சியின் நுணுக்கமும் இன்றைய அரசியலின் நெளிவு சுழிவுகளும் நன்கறிந்த வாசகரே இங்கு விதைக்கப்படும் நயவஞ்சனைகளைப் புரியமுடியும்.

பஞ்சாப்பில் பயங்கரவாதிகளை ராஜீவ் தோற்கடித்துவிட்டார். மிதவாதிகளை ஒழுங்குபடுத்தி அந்த மாநிலத்தில் ஆட்சி மீண்டும் செயற்பட ஆவன செய்துவிட்டார். இலங்கையில் இதனைப் பின்பற்றுவதில் என்ன தயக்கம்? என்கிறார் எழுத்தாளர்.

இந்தியாவில் இந்திரா செய்த தவறுகளையும், அவருடைய அவசரகால ஆட்சியின் கொடுமைகளையும் ஒரு பாடமாகக்கொண்டு ராஜீவ் முன்னேறுகிறார் இருப்பினும் அவருடைய ஆலோசகர்கள் அவரைத் திசை திருப்ப எத்தனிக்கின்றனர் என்கிறார் நாயர்.

அது பரவாயில்லை என்றபோதும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஆட்சிரீதியில் இயல்பான பிணக்கொன்றைத் தமது அரசியல் ஞானக் கண்ணூடாகக் கண்ட நாயர், தமிழ் மக்கள் சீக்கியர் போல ஒரு உடன்படிக்கை செய்துகொள்ள உகந்த காலம் வந்துவிட்டதென்கிறார்.

தமிழ்ப் போராளிகளின் நம்பிக்கை தொடருமானால் இன்று கிடைக்கும் அரசியல் உரிமைகள் தவறிவிடும்; ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைவிட வேறு யார் இதனைத் தீர்த்துவைக்க முடியும் என நியாயமான கேள்வியைக் கேட்டபோதும், இறுதியில் விடுக்கும் வெருட்டு நாயரின் நயவஞ்சகத்தை அம்பலப்படுத்துகிறது.

தமிழ் இளைஞர்கள் போரில் தொடர்வார்களானால் மக்கள் அரசாங்கத்தின் உதவியை நாடவும் இலங்கை அரசும், இந்திய அரசும் ஒருங்கு சேர்ந்து பயங்கரவாதத்தை முறியடிக்க முயற்சிக்கலாம் என அச்சமூட்டுகிறார்.

இவ்வித அரசியல் விமர்சனம் ஆங்கிலம் படித்த சிங்கள மக்களுக்கு ஆறுதல் அளிக்கலாம். இலங்கை அரசுக்குப் பேருதவியாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் இங்கு மட்டுமல்ல; எங்கு வாழ்ந்தாலும் இத்தகைய கருத்துக்களால் திசை திருப்பப்படமாட்டார்கள்.

பத்திரிகை படிப்பதில் மிக விழிப்பாக இருக்கவேண்டுமென்பதையே வற்புறுத்துகிறோம்.

# கருவாடு விற்கச் சென்ற இருவர் பிடிபட்டார்கள்

[6]

"திருகோணமலையில் இங்கிருப்பதுபோல் இரண்டு மூன்று படையல்ல. அங்கு எட்டுப் படையினர் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அஞ்சித்தான் இங்கு வந்து சேர்ந்தோம்".

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் பஸ்ஸில் வந்து சேர்ந்த அகதிகளில் ஒருவர் இப்படிக் கூறினார்.

'அதென்ன எட்டுப்படை? இராணுவப்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ்படை, மட்டுமேதானே இருக்கிறது' என்றேன்.

"யாழ்ப்பாணத்தில் இந்த நாலுபடைதான். ஆனால் திருமலையில் இவற்றுடன், ஊர்காவல்படை, குண்டர்படை, காடையர்படை, வெளியூர் படை என்றும் இருக்கிறது'

'இன்னும் இருக்கிறதா? என்றுகேட்டேன்'.

"ஆயுதப்படை, பாதுகாப்பு படை, அதிரடிப்படை என்றும் கூறுகிறார்கள், ஆனால் எங்களுக்கு ஊர்காவல்படை குண்டர் படை, காடையர்படை, வெளியூர்ப் படைகளினால்தான் துன்பங்கள் கஷ்டங்கள் அதிகம்" என்றார்.

"ஏன்?" என்று கேட்டேன்:

"அவர்களுக்கு துப்பாக்கி கொடுத்திருக்கிறார்கள். சுடத் தெரியாது. கண்டபடி சுடுவார்கள்" என்றார்.

'எங்கிருந்து வருகிறீர்கள்'? என்றேன்.

நிலாவெளியில் இருந்து என்றார்.

அவருக்கு 40 வயதிருக்கும். அவருடன் மனைவியும் 10 வயதுச் சிறுவனும் வந்திருந்தனர்,

முல்லைத்தீவுக்குவரும் அகதிகளில் பலரிடம் அடையாள அட்டை இல்லை. சிலர் உடுக்க மாற்று உடை எதுவும் இன்றி வந்திருக்கிறார்கள்.

கடந்த மாதம் 17ம் தேதி முதல் தினமும், முல்லைத்தீவுக்கு அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

சிலாவத்தை அகதிமுகாமிலுள்ள திருகோணமலை 10ம் நம்பர் குறிச்சியைச் சேர்ந்த ஒரு மீனவர் தமக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கூறுகிறார்: 11ம் தேதிகாலை ஒரு பெடியன் சேச்சுக்குப் பக்கத்தில் சுட்டுக்கிடப்பதாக கூறி நாங்கள் போய்ப்பார்த்தோம் அதனால் அப்பகுதியில் பதட்டமான நிலை ஏற்பட்டது. ஒரு கோஷ்டியினர் புகுந்து 10ம் நம்பர் திருக்கடலூர் தமிழ் மக்களைக் கொலைப் போவதாக வதந்தி மாதிரிக்கேள்விப்பட்டோம். நாங்கள் இவ்வளவு காலம் கஷ்டப்பட்டோம் இனியாவது பிள்ளைகள் தப்பி இருக்கட்டும் என்று நினைத்து எங்கள் படகுகளை எடுத்துக்கொண்டு எங்கள் குடும்பங்கள், அயலவர்களை ஏற்றிக்கொண்டு நிலாவெளிக்கு வந்து சேர்ந்தோம். நிலாவெளிக்கு கடற்கரைக்கு சமீபத்தில், சின்னச்சின்ன இடங்களில் தங்கியிருந்தோம். நாங்கள் கடற்றொழில் செய்வதினால் அப்படி இருந்தோம்.

12ம் திகதி காலை அங்கு வந்துசேர்ந்தோம். விவரிக்க முடியாத இன்னல்களை அனுபவித்தோம் வெடிச்சத்தம் கேட்டதும், வெளிக்கிட்டு ஓடுவோம் இப்படியான நிலையில் நாங்கள் பிடிக்கும் மீன்களைக் கருவாடாக்கினோம். என்னுடைய மச்சானும், தம்பிமாரும், திருமலையில் சிங்களவர்களின் மார்க்கட்டில் கருவாட்டை கொடுக்கப் போனார்கள் அவற்றை விற்க அங்கு வேறு இடங்கள் இல்லை அங்குதான் நாங்கள் வழக்கமாக கொடுப்பது. சரியான கஷ்டமாக இருந்தோம் பிள்ளைகளோ சாப்பிடமுடியாத நிலைமை. அந்த நிலையில்தான் கருவாட்டைக் கொண்டு போய் காசாக்கினால், பிள்ளைகளுக்கு பிரயோசனப்படும் என நினைத்தோம், வழமையான அந்த வியாபாரிக்குத் தான் கருவாடுகொடுப்போம் அப்போது இரண்டு பேரை முகிலன், பானு என்ற இருவரை பிடித்து விட்டார்கள் மற்றவர் தம்பிபாய்ந்து ஓடி வந்துவிட்டார் பிடித்தவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாது

அந்தசம்பவம் எங்கள் மனதில் மறைந்து கொண்டு போகும் போது மீண்டும் 10ம் நம்பரில் சிலர் கடலுக்குப் போய் மீன் பிடித்து வந்தார்கள் அந்த நேரத்தில் என் மருமகனும், மச்சானும் மகன் முறையானவர் எல்லோருமாக கடலுக்குப் போனார்கள் என்று அவர் கூறமுடியாமல் அழுது தவித்தார்.

அருகில் இருந்த பெண் அழுதபடி தொடர்ந்து கூறுகிறார். வள்ளத்தில் மீன்பிடிக்கப் போன எல்லாரையும் ஒரு கோஷ்டியினர் சுட்டுபொசுக்கி விட்டார்கள் மற்றப்பக்கத்தில் உள்ள வள்ளக்காரர்கள் வந்து சொன்னார்கள்

மீனவர் தொடர்ந்து கூறுகிறார்: 16ம் திகதிகாலை வெடிச்சத்தம் கேட்டது. பிள்ளைகள் நித்திரைவிட்டு எழும்பாத நேரம் பிள்ளைகளை எல்லாம் தூக்கிக் கொண்டு ஓடிவந்தோம். உடைகள் எதுவும் எடுத்துவரவில்லை எங்குபோறதென்று தெரியாத நிலையில் காடுகள் கடற்கரைவழியாக ஓடினோம். கம்பிகள் வேலிகள் எல்லாம் பாய்ந்து ஓடிவந்து ஒரு இடத்தில் நின்றோம், தம்பி மற்றும் சிலர், ஓடிவர முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது அவர்கள் ஒரு கோஷ்டியிடம் பிடிபட்டுவிட்டார்கள் அன்று முழுவதும் பிள்ளைகளுக்கு சாப்பாடு தண்ணீர் ஒன்றும் இல்லாமல் சரியான கஷ்டப்பட்டு ஒரு வாடியில் வந்து தங்கினோம். பின்னர் அங்கிருந்து இறக்கக்கண்டி என்ற இடத்தை வந்தடைந்தோம் அங்கு மீனவர்கள் தான் கூடுதலாக இருந்தார்கள் நாங்கள் எல்லோரும் ஓடிவந்த போது அவர்கள் பயந்து கொண்டிருந்தார்கள். அதைவிட்டு வேறு இடம்போகாத நிலைமை. அதைத்தாண்டினால் கடலுதான் அப்போது படகுகளில் வந்து கூப்பிட்டார்கள் நாங்கள் படகில் முல்லைத்தீவு வந்தடைந்தோம்.

(தொடரும்)

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

— கா. யோகநாதன் —

மூட்டை முடிச்சுகளுடன், உறவினரின் வீட்டைத்தேடிச் சென்றுகொண்டிருந்தனர்.

திருமலையில் இருப்பவர்களில் பலருக்கு யாழ்ப்பாணத்தில் உறவினர் உண்டு. ஆனால் தொடர்பு எதுவும் இல்லை. அதனால்தான் உறவினர்கள் விலாசம் கூட அவர்களுக்குத் தெரியாது. நாற்பது ஐம்பது வருடத்திற்கு முன்னால் இங்கிருந்து திருமலைக்கு திருமணம் முடித்துச் சென்றவர்களும் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் வரும் திருமலை அகதிகளில் அநேகர் இங்கு உறவினர், அல்லது நண்பர்கள் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அப்படி உறவினர், நண்பர்களைத் தேடிக் கண்டுபிடிக்காதவர்களே முகாம்களில் தஞ்சமடைகிறார்கள்.

முல்லைத்தீவுக்கு தினமும் திருமலையிலிருந்து அகதிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். நேற்று முன்தினமும் 25 குடும்பங்கள் வந்து சேர்ந்தனர்.

முல்லைத்தீவிலிருந்து தினமும் ஒரு பஸ்ஸில் யாழ்ப்பாணத்திற்கு அகதிகள் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள், இந்த அகதிகள், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பகுதிக்கு செல்கின்றார்கள்.

## சித்திரத்தேர் உருவாகிறது

(யாழ்ப்பாணம்)

சங்கிலி அரசனால் போற்றப்பட்டுவந்த நல்லூர் ஸ்ரீசட்டநாதர் சிவன்கோவில் தேவஸ்தான சபையார் ஐந்துலட்சம் ரூபா செலவில் சித்திரத் தேர் ஒன்றினை இவ்வாலயத்துக்கு உருவாக்கி வருகின்றனர் (ஐ)

## இருதடவை தலா 500ரூபா முற்பணம்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு இவ்வருடப் பண்டிகை முற்பணமாக இருதடவைகள் தலா 500ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சு விடுத்துள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இது வழங்கப்படுவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மீண்டும் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா — பூவரசங்குளம் மகாவித்தியாலயத்திலிருந்த அகதிகள் வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து மேற்படி வித்தியாலயத்தில் வகுப்புகள் ஆரம்பித்து நடைபெறுவதாக அதிபர் திரு. க சீனிவாசகம் அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 5ம் தவணைக்காக பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பமாகிய போதும் மேற்படி பாடசாலை அகதிகள் முகாமாக இயங்கி வந்தமையால் வகுப்புகள் நடைபெறாமலிருந்தது தெரிந்ததே. (ச)

கம்பளைக்குச் சென்ற—

# பொலிஸ்-பொதுசனதொடர்பு தலைவருக்கு நேர்ந்த கதி!

## ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வியாபாரவிடயமாக சொந்த வாகனத்தில் கம்பளைக்கு விஜயம் மேற்கொண்டோர்மீது பாதுகாப்பு படையினர் நடத்திக்கொண்ட கடுமையான நடவடிக்கையை கண்டித்து பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு நல்லூர் தலைவர் திரு. காசிலிங்கநாதன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையனுப்பி வைத்துள்ளார்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

"எனது பிள்ளைகள் பாலகன், சுதாகரன், மருமகன் கிருபாரஞ்சன் ஆகியோருடனும், முஸ்லிம் நண்பர்கள் நால்வருடனும் இரு காரில் நாம் கம்பளைக்கு வியாபார நோக்குடன் சென்றோம் நாவற்குழி முகாம் தொடக்கம் கம்பளைவரை 13 பாதுகாப்பு படையினரின் முகாம்களின் முன்னிலையில் பல மணிநேரமாக தடுத்துவைக்கப்பட்டும் தகாத வசனங்களை எம்மீது பேசியும் எம்மைத் துன்புறுத்தினர்.

"கம்பளையை நாம் அடைந்ததும் அங்கு எம்மை சுற்றி வளைத்த பொலிஸ் கோஷ்டியினர் 'பயங்கரவாதிகள்' எனக்கூறி எம்மைக் கைதுசெய்து பொலிஸ்நிலையம் கொண்டு சென்றனர். அங்கு காற்று வசதி அற்ற இருண்ட சிறைக்கூடத்தில் தடுத்துவைத்தனர்.

"நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல" என நிரூபிக்க பல தடவைகள் முற்பட்ட போதும் அவர்கள் செவிசாய்க்க மறுத்துவிட்டனர். இறுதியாக எம்முடன் கூட வந்து கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் நண்பர்கள் தமது எம்.பி.க்களுடன் தொடர்பு கொண்டபின்னர் 30 மணித்தியாலத்தின்பின் விடுதலை செய்தனர். அப்பாவி மக்களாகிய எம்மவரை இவ்வாறு துன்புறுத்தலை தாங்கள் தடுத்து நிறுத்த ஆவன செய்வீர்கள் என கேட்டுக்கொள்கின்றேன்" (மா)

---

## முல்லைத்தீவில் ஒருவருக்கு 'மரணதண்டனை'

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிலாவத்தைச் சந்தியில் மரத்துடன் கட்டப்பட்ட நிலையில் ஒருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கொக்கிளாயைச் சேர்ந்த 25 வயது மதிக்கத்தக்க இவர் இயக்கத்தின் பெயரைச் சொல்லி தகாத செயல்களில் ஈடுபட்டமைக்காகவே இம் மரண தண்டனைவழங்கப்பட்டதாக சடலத்தின் அருகில் காணப்பட்ட சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இயக்கத்தின் பெயர் குறிக்கப்பட்டிருக்கவில்லை.

---

## துப்பாக்கிச் சூட்டுக்கு மலையக இளைஞர் பலி!

(யாழ்ப்பாணம்)

லொறியில் வந்த மலைநாட்டு இளைஞர் ஒருவர் வவுனியாவில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்!

மலைநாட்டைச் சேர்ந்த பி. ஆதிநேசன் (25 வயது) என்ற இளைஞரே பலியானவராவார்.

மன்னாரில் பெற்றோருடன் வசித்துவந்த இந்த இளைஞர் லொறியில் கிளீனராகப் பணியாற்றிவந்தாரென்றும், கொழும்பிலிருந்து வந்தபோது வவுனியாவில் ஆயுதப்படையினர் மறித்துச்சோதனை செய்ததாகவும் கூறப்படுகிறது.

அப்போதுஇறந்தவர் தன்னை ஒரு முஸ்லிம் என்று கூறியதாகவும், ஆயுதப்படையினர் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தபோது, அவர் ஓட முயற்சித்ததாகவும், அச்சமயம் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

---

## நாளை ஹர்த்தால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதம் 30-ம் திகதி முதல் முஸ்லிம் வர்த்தகர்களின் யாழ்-கொழும்பு லொறிச் சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து, யாழ்ப்பாணம் வரை, வாகனங்கடத்தல் சொல்லை நடைபெறுதென, முக்கிய இயக்கங்கள் உறுபவிக்கும்வரை லொறிச் சேவை நடைபெறுதெனக் கூறப்படுகிறது. நாளை வெள்ளிக்கிழமை 7 இயக்கங்களும் கூடி நிலைமையை ஆராயவிருக்கின்றன. (க)

### மற்றுமொரு கோரிக்கை

நாளை வெள்ளிக்கிழமை தனிப்பட்ட கடைகள், வீடுகள் வாகனங்களில் நடைபெறும் கொள்ளைகளைக் கண்டித்து பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு சாவகச்சேரி கைத்தொழில்-வர்த்தக சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளது.

---

## வவுனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை இயக்கங்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதனை ஸ்ரீலங்கா அரசு சரியானமுறையில் நடைமுறைக்குக்கொண்டுவரவில்லை. தமிழீழப் பகுதியான திருமலை, மட்டுநகர் ஆகிய இடங்களில் பெருமளவு உயிர் - உடைமைகளைசேதப்படுத்துவதுமல்லாது வவுனியாவில் உள்ள தமிழீழ மக்கள் படுகொலைசெய்யப்பட்டும் அவர்களின் உடைமைகள் கொள்ளை அடிக்கப்பட்டும் எரிக்கப்பட்டுமுள்ளன. இதனைத்தடுத்து நிறுத்தி மக்களைப் பாதுகாக்க வேண்டியதுமல்லாமல் அரச படையின் வெறிச்செயலை நிறுத்தும் நோக்குடன் எமது இயக்கத்தால் கடந்த 30ம் திகதி அதிகாலை வவுனியா பொலிஸ் நிலையம் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டது. இதில் பொலிஸ் அதிரடிப்படையும் இராணுவமும் பெருமளவு கொலைப்பட்டுள்ளார்கள் பாரிய ரோந்து வாகனங்களும் ஹெலிகொப்டர்களும் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன. எமக்கு எந்தவிதமான, உயிர், உடைமைச் சேதங்களும் ஏற்படவில்லை. இத்தாக்குதலின் பின் அரச படையும் ஊர்காவற்படையும் தமது வெறிச்செயலையும் நடமாட்டத்தையும் முற்றாக நிறுத்தியுள்ளன" (மா)

---

## 'அப்பாவி சிங்களவர் எதிரிகளல்ல'

(யாழ்ப்பாணம்)

"அப்பாவிச்சிங்கள மக்கள் நமது எதிரிகளல்ல; ஆயுதபாணிகளாகி ஈழத்தில் எல்லைப்புறங்களிற் குடியமர்த்தப்பட்டவர்களும் ஊர்காவல் படைக்குண்டர்களுமே நமது எதிரிகள்" என்று 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' (ஈ. பி. ஆர். எல். எவ்) வெளியிட்டுள்ள 'ஈழம் செய்திப் பலகை' சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அச்சுவரொட்டியில் 'புளட்'ஐ மேற்கோள் காட்டி 'ஈ. என். எல். எவ்.'இலுள்ள 'சில குழுக்கள்' அப்பாவிச் சிங்கள மக்களைக் கொல்கின்றனர் என்று ஸ்ரீலங்கா வானொலி 'ஈ. என். எல். எவ் மீது அவதூறு விளைவிக்கிறது', என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

---

✶ யாழ் பல்கலைக்கழக மாணவரின் பாத யாத்திரை இன்று இறுதி நாளாகும்.

### தேயாத பாதமுடன் திரும்பிடுவீர் .....

இருண்ட சிறைகளில்
வாழ்வின் நாட்களை
எண்ணும் எம்மவரை
மீட்பதற்காய்......

பட்டங்கள் பெறவந்தும்
படிப்பினையே ஒரு பக்கம்
எட்டவே வைத்திட்டு
எழுந்திட்டீர் குரல்கொடுக்க

ஓயாது நாள்முழுதும்
கூடுகின்றீர்......
பாடுகின்றீர்......
தீரம் விளைந்துவிட
நாடகமும் போடுகின்றீர்...
நல்லவற்றைச் செய்கின்றீர்

உண்ணா நோன்பிருந்து
உலகினையே கவர்ந்துவிட
எண்ணியதைச் சாதித்தீர்
எல்லாச் சுமையோடும்
"உள்ளே" இருப்பவர்க்கும்
ஊக்கம் கொடுத்திட்டீர்

இப்போ
பாதங்கள் தேயும்
பலதூரம் நடந்துவிட
ஆதங்கம் கொண்டீர்
ஆனால் நிச்சயமாய்
தேயாத பாதமுடன்
தெம்புடனே திரும்பிடுவீர்

— மலையன்பன்

---

## நீண்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடை உரிமையாளருடன் வந்த சிறுவனை திருப்பி அனுப்பிவிட்டு உரிமையாளரை வாகனத்தில் ஏற்றிச் சென்றனராம்.

காலையில் வேலைக்குப் புறப்பட்டவர்கள், குறுக்கு வீதிகளினூலும், ஒழுங்கையினூலும், சிலர் சைக்கிள்களை தூக்கிக் கொண்டு வேலிகளைக் கடந்தும் சென்றனர்.

துப்பாக்கி வெடிச் சத்தமோ குண்டுவெடிச் சத்தமோ எதுவும் கேட்கவில்லை.

திருநெல்வேலிச் சந்தியில் நின்ற வியாபாரிகளும், வாடிக்கையாளர்களும் சாமான்களை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

நகரில் காலை 10 மணிவரை சில கடைகள் ஒற்றைக் கதவில் மட்டும் திறக்கப்பட்டு, சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது. இராணுவத்தினர் முகாமிற்கு சென்றபின்னரே வழக்கம்போல் கடைகள் திறக்கப்பட்டன.

நகரில் பல சந்திகளிலும் எரிபொருள் விற்றுக்கொண்டிருந்தவர்கள் அவ்விடத்தை விட்டு சென்றதனால் பெற்றோல் போத்தல் உடைக்கப்பட்டுக்கிடந்தன. (ச-க)

---

## எரிந்த வாகனத்தை எடுத்து சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்துக்குச் சொந்தமான எரிந்த வாகனம்ஒன்றை இனந்தெரியாதவர்கள் நேற்றிரவு எடுத்துச்சென்றுள்ளனர். இந்தவாகனம் வன்செயலினால் எரிக்கப்பட்டு பாவனைக்குதவாததிலையில் வைக்கப்பட்டிருந்ததாம்.

---

## ஊழியர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட வாகனங்களை மீண்டும் ஒப்படைக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தே இன்று ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்யவுள்ளதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (மா)

---

## நால்வர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தீவில் சோதனை நடத்திய ஆயுதப்படையினர் 54 பேரைக் கைது செய்ததாகவும் விசாரணையின் பின்னர் 50 பேரை விடுவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் பயிற்சிபெற்ற தீவிரவாதி ஒருவரும் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தது. (ய-மா)

---

## தொண்டமான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து தமிழ்த்தீவிரவாதக் குழுத் தலைவர்களுடனும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடனும் விரிவாகப் பேச்சுக்கள் நடத்துவார்.

தமிழக முதலமைச்சரையும், அமைச்சர் சந்திப்பார்.

அவசியம் ஏற்பட்டால் மட்டுமே தாம் புதுடில்லி சென்று பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திப்பதாக அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நேற்றிரவு 'ஈழநாடு' வுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையே தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் வெள்ளிக்கிழமை புதுடில்லி செல்லவிருக்கின்றனர் இவர்கள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சனிக்கிழமை சந்திப்பார்கள்.

---

## பெண் பார்க்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தது, இவர் 30-ந் திகதி காலை சிங்கள ஊழியர் ஒருவருடன் பஸ்ஸில் புறப்பட்டுவந்தபோது, வீதி குண்டினால் தகர்க்கப்பட்டு, போக்குவரத்துத் தடைப்பட்டிருந்ததாகவும், இருவரும் இங்கு இறங்கி, நகரத்திற்கு செல்லமுற்பட்டபோது, பஸ்ஸிலிருந்த சிலர் போகவேண்டாம்' என்று தடுத்ததாகவும் அப்படியிருந்தும் இருவரும் இறங்கிச்சென்றபோது விகாரைக்குச் சமீபத்தில் நின்றவர்கள் இருவரினதும் அடையாள அட்டைகளை வாங்கிப்பார்த்ததாகவும், முதலில் சிங்கள ஊழியரைப் போகுமாறு கூறியதாகவும், பின்னர், சுந்தரலிங்கத்தைச் சோதனை நடத்தியவர் போகும்படி கூறியதாகவும், அவர் சிறிது தூரம் சென்றதும் சுடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

சடலம், வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று முன்தினம் மாலைமரண விசாரணை முடிவுற்று சடலத்தை உடன் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு மரண விசாரணை அதிகாரி பணித்திருந்தும், சடலத்தை உடனே கொண்டுவருவதில் சில தடைகள் ஏற்பட்டதாகவும் பின்னர் பலத்த முயற்சியின்பின் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டதாகவும் தெரியவருகிறது.

வ.பி.போ.ச. டிப்போ ஊழியர்கள் நேற்று அஞ்சலிசெலுத்தினார்கள். (க)

---

## திடீர் முற்றுகை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிக் சென்று கொண்டிருந்த பொழுது ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கியால் சுட்டதாகவும் அவர்கள் சைக்கிளைப் போட்டுவிட்டு மரங்கள் செறிந்த பகுதிக்குள் ஒளிந்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் ஒருமணி வரை இச்சோதனை இடம்பெற்றது. (மா)

---

## பாதயாத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்குழு நேற்று ஏழாவது நாளாகத் தமது கிராம பாதயாத்திரையை மேற்கொண்டிருந்தனர்.

பலநாட்களாக வெயிலிலும் மழையிலும் பாதயாத்திரை செய்து களைப்படைந்த நிலையில் காணப்பட்ட மாணவ மாணவிகளைக் கொண்ட குழுவினர், நேற்று மிகுந்த உற்சாகத்துடன் நடந்து சென்றனர். ஏராளமான பொதுமக்கள் அவர்களுடன் நேற்று பாதயாத்திரையில் ஈடுபட்டிருந்ததால் அந்த உற்சாகம் இருந்ததாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை நீர்வேலி கந்தசுவாமி கோவிலிலிருந்து பாதயாத்திரைக் குழுவினர் பருத்தித்துறை வீதி ஊடாக கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோவிலை அடைந்தனர். அங்குள்ள சனசமூக நிலையம் அவர்களை வரவேற்று மதியபோசன விருந்தளித்தது வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

பி.ப. 4 மணிக்கு மீண்டும் புறப்பட்டு கோப்பாய் புனித மரியாள் தேவாலயம் அடைந்ததும் அங்குள்ள மக்கள் தேநீர் விருந்தளித்தனர்.

நேற்றிரவு 7-30 க்கு கோப்பாய் தெற்கு - இருபாலை வீரபத்திரர் ஆலயத்தை பாதயாத்திரைக் குழுவினர் சென்றடைந்தனர். அங்கு கலாசாரக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

பாதயாத்திரைக்குழு இன்று காலை அங்கிருந்து புறப்பட்டு பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர் கந்தசுவாமி கோவிலை வந்து சேரும் அங்கு அளிக்கப்படும் மதியபோசனத்தின் பின்னர் பாதயாத்திரைக்குழு புறப்பட்டு பருத்தித்துறை வீதிவழியாக யாழ். நகரை வந்தடையும்; அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி ஊடாக இரவு யாழ். பல்கலைக்கழகத்தைச் சென்றடையும். இன்றிரவு கலாசாரக் குழுவினரின் 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்'-கவிதா நிகழ்வு; 'மாயமான்' தெருக்கூத்து, 'நாமார்க்கும் குடியல்லோம் - வில்லிசை - கதாப் பிரசங்கம், விடுதலைப்பாடல்கள் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இன்றுடன் பாதயாத்திரை முற்றுப்பெறுகிறது (மா)

---


### கடைசி நேர வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

ஞானசுந்தரம் ஆனந்தகுமார் அவர்களின் தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திரு. அனந்திருஷ்ணன் ஈழநாடு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்; 1044

# செய்திச்சிதறல்

## முல்லைத்தீவுக்கு தொடர்ந்து வரும் திருமலை அகதிகள்

(முல்லைத்தீவு)

திருமலை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான அகதிகள் முல்லைத்தீவுக்கு வந்தவண்ணமே இருக்கின்றனர். பிறந்த ஊரையும் உடைமைகளையும் விட்டு ஏழு அல்லது எட்டு மணித்தியாலங்கள் நடையில் பிரயாணங்கள் செய்து தங்கள் உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு அவர்கள் முல்லைத்தீவு வருகிறார்கள்.

கடந்த 28-ந் திகதி 200 அகதிகள் வந்து சேர்ந்தனர். திருமலை மக்கள் மாலை 3 மணியிலிருந்து கடலையே பார்த்தபடி ஏதாவது வள்ளம் வந்து ஏற்றிக்கொண்டு செல்லாதா என்று ஏங்கித் தவித்தபடி நிற்பதாகவும் பஸ் வசதியில்லாது திரும்பி பாதுகாப்பான இடங்களுக்கு சென்று மீண்டும் அடுத்த நாள் வந்து வள்ளம் வருமா என எதிர்பார்த்து நிற்பதாகவும் அவர்களில் ஒருவர் கூறினார்.

பெண்மணி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், அதிகாலை 5 மணிக்கு வந்த இராணுவம் சோதனையிட தொடங்கியதாகவும் தாங்கள் பயம் காரணமாக தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகவே அங்கு வந்து 'பாதர் கொட்டியா'' எங்கே என்று கேட்டு விரட்டியதாகவும் மாலை ஐந்து மணிக்கே இராணுவம் திலாவெளிக் கிராமத்தை விட்டு அகன்று சென்றதாகவும் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்ற பொழுது பல பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு மரியன்னை மகளிர் அபிவிருத்தி மன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் மேற்படி பணிமனையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: அருள்திரு. சா பி. கிருபானந்தன் அடிகள், தலைவர்: திருமதி மே. அமலோற்பவநாயகி, துணைத் தலைவர்: திருமதி ம. மாகிறேற்றம்மா, செயலாளர்: திருமதி சி. மேரி இளசெல்ரீனுறாபி, துணைச்செயலாளர்: திருமதி அ. மேரி ஜெயோல்டா கொன்சு, பொருளாளர்: திருமதி செ. பேதுருப்பிள்ளை, சுகாதார குழுத் தலைவர்: செல்வி ம. மேரிறீற்று, சுகாதாரக்குழு செயலர்: பே. இ. பாலேந்திரா.

## வீதி திருத்தப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டிருந்த நவாலி-சங்கரத்தை வீதி தற்போது திருத்தப்பட்டுவருகின்றது.

சுமார் 3 மைல் நீளமான இவ்வீதி குன்றும் குழியுமாக விளங்கியதால் அவ்வீதியால் பிரயாணம் செய்வோர் பல கஷ்டங்களை அனுபவித்து வந்தனர். அத்துடன் மழைகாலத்தில் அவ்வீதியிலுள்ள கிடங்குகளில் வெள்ளம் தேங்கி குளம் போன்று காட்சியளித்ததால் அபாயப் பிரதேசமாகவும் காணப்பட்டது (ச)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி சாம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையே கடந்த 9ம், 10ம் திகதிகளில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி கல்லூரி வரலாற்றில் முதன்முறையாக 10 மெய்வல்லுனர் போட்டிகளில் முதலிடத்தையும் 3 போட்டிகளில் இரண்டாமிடத்தையும் 8 போட்டிகளில் மூன்றாமிடத்தையும் பெற்று அனைத்துப் பாடசாலைகளிலும் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது

யாழ் மாவட்ட சகல பாடசாலைகளும் கலந்துகொண்ட இப்போட்டி யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது (ச

## நல்லூர் உற்சவகால தொண்டர் சேவையாளருக்கு பாராட்டு வைபவம்

(வண்ணார்பண்ணை)

''தொண்டர் சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு, மனப்பக்குவமும், மனஉறுதியும், சேவைக்கான இலட்சியப் பிடிப்பும் மிக அவசியமாக இருக்க வேண்டும். நடந்து முடிந்த நல்லூர் திருவிழா வன்று பக்தர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைக்கு தொண்டர்களின் உறுதியான சேவை பதில் கொடுத்ததாக அமைந்திருந்தது.''

என்று நல்லூர் உற்சவகால தொண்டர் சேவையில் ஈடுபட்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் இரண்டாம் நாள் வைபவத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இரண்டு தினங்கள் நல்லூர் இந்துவிடுதியில் நடைபெற்ற இச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் சென்ஜோன்ஸ் சாரணர் பிரிவுகளுக்கான சான்றிதழ்கள் முதலாவது நாளும் இந்து இளைஞர் பேரவை நல்லூர் பகுதி பொதுமன்றங்கள் ஆகியவற்றிற்கு அடுத்த நாளும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இரண்டு தினங்களும் தொண்டர்களுக்கான தேநீர்விருந்தும் இடம்பெற்றது

ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில்: ஆலய சுற்றுப் புறங்களில் உள்ள பொதுமக்களும், பொது ஸ்தாபனங்களும் இதில் ஆற்றிய பணிகள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவைகளாக இருந்தன இம்முறை ஆலய சுற்றாடலில் மறைமுகமான தொண்டர் சேவைகளும் இடம் பெற்று வந்ததால அசம்பாவிதங்கள், களவுகள் சுற்றுப்புறங்களில் இல்லாதிருந்தது குறிப்பிடத்தக்கது என்றார்.

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. து சி. சண்முகலிங்கம், நல்லை ஆதீன இளைஞர் மன்றத்தைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் ஆகியோரும் தொண்டர்களையும், மாநகர ஆணையாளரையும் பாராட்டி உரையாற்றினர்.

## கசிப்பு அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி நாவலடி கிராமத்தில் கசிப்புவற்றலை முற்றாக ஒழிக்கப்பட்ட பின்னரும் இரகசியமாக கசிப்புவிற்பனையில் ஈடுபட்டு வந்த ஒருவரை அக்கிராமத்து இளைஞர்கள் கையும் மெய்யுமாக பிடித்து உடன் அங்கிருந்த கசிப்புப் போத்தல்களால் அவருக்கு அபிஷேகமும் செய்துள்ளனர்.


கடந்த திங்கட்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது. (ச)


மேற்கு பேர்லின்,
பிரான்ஸ், இத்தாலி
பிரயாணங்கள்
OCTOBER 7, 14, 28 திகதிகளில்
எமது பிரதிநிதி உங்களை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் செல்கின்றார்
மற்றும்
கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா
போன்ற நாடுகளுக்கு விசா பெற்றுத் தரப்படும்.
மற்றும் சகல
விமான டிக்கட்டுகளுக்கும்
பாஸ்போட், பொண்ட், விசா
எல்லாவற்றுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளவும்
இத்தாலி, பிரான்ஸ் செல்வதற்கு
முன்கூட்டி எம்முடன் கட்டுச்சிட்டு தந்தவர்கள்
பிரயாண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால்
உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்
லிப்ருஸ் லிமிட்டெட்,
R. G. கட்டிடம், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES
CITY and GUILDS of LONDON INSTITUTE
QUANTITY SURVEYING Parts I and II
Part I.
Subjects: 01 Written
02 Project
Part II. (a Measurement
(b) Estimating and Analysis of Prices
Exam: June 1986
Classes Commence: October 12th and 13th
Saturday / Sunday } 9-00 — 10-30 a m.
Instructor: Mr N M Jeyakuuar (Quantity Surveyor)
Details from: Registrar,
Patrician Institute of Higher Studies
59, St. Patrick's College Road, Jaffna.



யாழ்ப்பாணம் — கொழும்பு

விமான சேவை!
(UPALI & AIR TAXI) உடனடிச் சேவை!
தொடர்பு கொள்க:
MACK TRAVELS
இல 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791 — 24414 (Residence)



NATIONAL CERTIFICATE IN ENGLISH EXAM.
எமது இளம் சந்ததியினரின் எதிர்கால சுபீட்சத்திற்காக மேற்படி பரீட்சைக்கான
Week-end Lectures 12-10-85ல்
ஆரம்பமாகவுள்ளன.
காலம் 4 மாதங்கள் கட்டணம் ரூபா 125/-
★ ஆசிரியர் பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்
தகைமை: G. C E (O/L) ஆங்கில பாடத்தில் சித்தி அல்லது அதற்கு இணையான ஆங்கில அறிவு
★ அச்சடித்த பாடக்குறிப்புகள் FREE
மேலும் விபரங்களுக்கு!
CANTABIA INSTITUTE
21, Main Street. Jaffna.
Phone: 24201

# மனைவியின் நினைவு வேலை பறிபோனது!

(சவூதியிலிருந்து எம். சுபேந்திரன்)

மனைவியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஒருவரது வேலையைப் பறிகொடுக்க வைத்ததுடன் 13,000 ரூபா பணத்தையும் இழக்க வைத்தது இச்சம்பவம் சவூதிஅரேபியா. வில் நடந்துள்ளது.

சவூதிஅரேபியாவின் தலைநகரான றியாட்டில் உள்ள கம்பனி ஒன்றில் பணியாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரே மனைவியின் ஆசையால் தனது வேலையைப் பறிகொடுத்ததுடன் 13,000ரூபா பணத்தையும் இழந்து கொண்டவராவார்.

கடந்த மேமாதம் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை சென்ற இவர் கடந்த ஆகஸ்ட் மாதம் சவூதி திரும்பிய பின்னர் மனைவியின் நினைவால் வேலைக்குச் செல்ல மறுத்ததுடன் இலங்கை திரும்புவதையே விரும்பினாராம். இதனைத் தொடர்ந்து இவரது வேலையை கம்பனி பறித்துக் கொண்டதுடன் இலங்கை செல்வதற்கான பயணச் செலவாக 13 ஆயிரம் ரூபாவை இவரிடமிருந்து அறவிட்டும் இருந்தது. பிரஸ்தாப நபர் கடந்த 21ம் திகதி இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

## லைட் திருத்தியவர் மின்சாரத்திற்கு பலியானார்

(யாழ்ப்பாணம்)

ரியூப்லைற் திருத்தச்சென்றவர் மின்சாரத்தால் தாக்குண்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் பலியானார்.

மேற்படி சம்பவம் கடந்த 29 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசுவமடுப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

விசுவமடுப் பகுதியிலுள்ள கடையொன்றில் சிப்பந்தியாக கடமையாற்றும் சவரிமுத்து அன்ரன் (15 வயது) என்பவரே மின்சாரத்திற்கு பலியானவராவார். (ச)

## தாக்குதல் தொடருகிறது

[யாழ்ப்பாணம்]

போக்குவரத்து வசதியின்மையால் கால் நடையாக வந்துகொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தமிழர்களும், முஸ்லிம்கள் சிலரும் வவனியாவில் குண்டர் கோஷ்டியினால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் வைத்திருந்த ரொக்கப்பணம், கைக்கடிகாரம் ஆகியனவும் குண்டர் கோஷ்டியினால் சூறையாடப் பட்டனவாம்.

அதேசமயம் கொழும்பிலிருந்து வந்த லொறி ஒன்றுக்கும் குண்டர் கோஷ்டி தீ வைத்து எரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் ஒரு வகையாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்கள் [மா]

## லெபனான்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குதித்துள்ளனர்.

இதனால் சுனி பிரிவினரே இந்த ஆட் கடத்தலை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சோவியத் யூனியன் இக்கடத்தலைப் பலமாகக் கண்டித்துள்ளது தீவிர வலதுசாரிகளே இதற்குப் பொறுப்பாளர் என்று 'டாஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. பணயக் கைதிகளை மீட்பதற்கு அனைத்து முயற்சிகளையும் தாம் மேற்கொள்வதாக சோவியத் அறிவித்தது (கி)

## தாயோடு மனக்கசப்பு: மகள் தற்கொலை

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் டேவிற்-சிவஞானேஸ்வரி [வயது - 18] என்பவர் தாய் சோமாவதி வீட்டுவேலை செய்யவில்லை என ஏசியதனால் மனமுடைந்து நஞ்சு அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

நஞ்சு அருந்தியதும் அவர் முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டார் அவரின் உயிரை பாதுகாக்க எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தது.

முல்லியவளை மரணவிசாரணை அதிகாரி கே. தியாகராசா மரண விசாரணை நடாத்தி தற்கொலை என தீர்ப்பு வழங்கினார்.

## கசிப்பு விற்றவருக்கு கிடைத்த தண்டனை

(யாழ்ப்பாணம்)

கசிப்புவிற்பனை செய்து வந்த வீடொன்றை முற்றுகையிட்ட ஒரு கோஷ்டியினர் விற்பனை செய்தவரையும் அங்கு கசிப்பு குடித்துக் கொண்டிருந்தவர்களையும் கடுமையாகத்தாக்கியதுடன் அவர்களின் தலைகளை மொட்டையடித்துச் சென்றுள்ளனர்.

அங்கிருந்த கசிப்புப் போத்தல்களை அவர்கள் மீது கவிழ்த்து ஊற்றி அபிசேகம் செய்ததுடன் கடும் எச்சரிக்கையும் செய்தனராம்.

இச்சம்பவம் அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் நடைபெற்றது. (ச)

## உயர்தர வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்)

சங்கானை சிவப்பிரகாசமகா வித்தியாலயத்தில் க. பொ. த உயர்தர வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

மேற்படி கல்லூரி அதிபர் திரு எம். கே. கைபாசலிங்கம் யாழ். கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியின் பலனாக பணிப்பாளர் அங்கீகாரம் வழங்கியதையடுத்தே இவ் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதிய கட்டிடவசதிகள், பட்டதாரி ஆசிரியர்கள் இருந்த போதிலும் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படாதிருந்தமை இப்பாடசாலையின் ஒருபெருங்குறையாகவிருந்தது குறிப்பிடத்தக்கது. (ச)

## "எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நாட்டுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்"

(கொழும்பு)

'மலையாளிகள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்நாட்டிற்கு விசுவாசமாக இருக்க வேண்டும். அதே வேளை தம் பாரம்பரிய கலை. கலாசார பண்பாடுகள் ஆகியவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் தவறக்கூடாது.'

என்று இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிட் ஓணம் பண்டிகையை யொட்டி மலையாளக் கலாலயம் நடத்திய வைபவமொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை, கொழும்பு கமலா மோடி மண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

கும்மி, மகாவலி நடனம், கிராமிய நடனம், மலையாள மெல்லிசைப் பாடல்கள் ஆகியவை உட்பட நாநாவித கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இந்தியத் தூதரக கலாசாரச் செயலாளர் திருமதி லக்ஷ்மிபூரி, இலங்கை குஜராத்தி மன்றத் தலைவர் திரு. கே. வி. மோடி. அவரது பாரியார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிட் தொடர்ந்து பேசுகையில், 'இந்நாட்டு மலையாள சமூகத்தினரைச் சந்திக்க அளவளாவும் வாய்ப்பு இன்று எனக்குக் கிட்டியுள்ளது இதற்காக நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கலாலயத் தலைவர் திரு. வி. எம். விஜயன் ஆரம்பத்தில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அவர் தம் உரையில் இந்த நாட்டில் பரந்துபட்டு மலையாளிகள் வாழ்கிறார்கள். இவர்களை ஒருங்கிணைக்கும் பணியில் எமது கலாலயம் வெற்றிகண்டு வருகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக, எமது கலாலயம் இதன் ஆரம்பகாலம் தொட்டு இன்றைவரை ஓணம் பண்டிகையையும் வருடப்பிறப்பையும் வருடந்தோறும் கொண்டாடி வந்துள்ளது என்றார்.

## இன்றைய பலன்

மாதம்- புரட்டாதி
திகதி- 17 (3-10-85)
கிழமை- வியாழன்
திதி- சதுர்த்தி
நட்சத்திரம்- கார்த்திகை

மேடம்- அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். தொழில்துறையிலும் வீழ்ச்சி தோன்றும். வாழ்க்கையில் பொருள் முடக்கம் தென்படலாம்.

இடபம்- இன்று காதல்களை தாக்கும். அன்னியர் சகவாசம் உங்களைப் பகைக்க வைக்கும். ஏமாற்றம் தாக்கும். எதிலும் கவனம் வேண்டும்.

மிதுனம்- குடும்பத்திலும் குதூகலம் காணும். இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும். சிலருக்கு வாழ்க்கையில் தலைமைப்பீடமும் கிடைக்கலாம். கவனம்.

கடகம்- சகோதர கருத்து வேற்றுமைக்கிடமுண்டு. வெளியிடத்துப் பயணத்திற்கும் வழி கோலப்படலாம். தொழில் நஷ்டமுமுண்டு. வீண் தொல்லைகளுமுண்டாம்.

சிங்கம்- தாய்வழிச் சந்தோசம். சுபகருமம் இவற்றுடன் தெய்வ சிந்தையும் மேலிடும் நீர்த்தொழில் விருத்திக்குமிடமுண்டாம்.

கன்னி- புத்திரர்மூலம் புகழ் கிடைக்கும். பிரிந்தவர் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். பெரிய இடத்துத் தொடர்பும் கிடைக்கும்.

துலாம்- பொன்னான சந்தர்ப்பத்தை இன்று இழக்கக்கூடும். நண்பர்களாலும் கவலை அதிகரிக்கும். பணவிரையத்திற்குமிடமுண்டு.

விருச்சிகம்- புதிய முயற்சிகள் கைகூடலாம். கனஸ்திர பேச்சும் இடம்பெறலாம். எதிர்பாராத வரவிற்குமிடமுண்டாம்.

தனுசு- திடீர் விபத்துக்கிடமேற்படலாம். கடற்றொழிலாளர்கள் அவதானம் வேண்டும். கடமையிலும் கண்ணியம் தவறக்கூடும். உடல்சுகாதாரம் நன்று.

மகரம்- பொதுப்பணி நாட்டம் பொதுசன மதிப்பும் உண்டு பூமிச்சேர்க்கையுமுண்டு தந்தைவழித்தனமும் கிடைக்கும்.

கும்பம்- குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். தொழில் வாய்ப்பும்கிட்டலாம். வெளியிடத்துப்பொருளும் கிடைக்கலாம்.

மீனம்- தொழில் முன்னேற்றத்திற்கிடமுண்டு வணிகத்துறையிலும் புதிய வாய்ப்புக்கள் கிட்டலாம். சமூகத்திலும் மதிப்புக்கிடமுண்டு.

திருமலை

வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை 5-00 செய்திகள்
5-10 கார்ட்டூன்
5-30 பிரகவிக்கா நேரடி ஒளிபரப்பு
6-00 விலங்கு இரகசியம்
6-30 செய்திகள் (தமிழ்)
6 55 விளையாட்டு நிகழ்ச்சி
7-25 அன்டுன் (சிங்களம்)
8-00 செய்திகள் சிங்களம்)
8 25 சதுடுகண்டுல (சிங்கள நாடகம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 ஸ்கோப்பியோன்
9-50 ஆயுள்வேத டாக்டருடன் ஓர் சந்திப்பு (சிங்களம்)
10-15 உலக யுத்த நிகழ்ச்சி
11-30 ஒளிபரப்பு முடிவு.

## தற்காலிக ஆசிரியர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தற்காலிக ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் வரும் 6 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வசதிக் கட்டணத் தற்காலிக ஆசிரியர்களின் விபரங்களை கல்வி அமைச்சு சகல கல்வித் திணைக்களிடமிருந்தும் கோரியுள்ளதால் தற்காலிக ஆசிரியர்களாகக் கடமையாற்றிவரும் சகலரும் இக்கூட்டத்துக்கு வந்து ஆலோசனையில் கலந்து கொள்ளுமாறு இச்சங்கத்தின் செயலாளர் திரு. ஜே. சோமசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ் ஆலோசனைக்கூட்டத்துக்கு அ. இ. த. ஆ சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம், மாவட்ட அதிபர் சங்கத் தலைவர். திரு. க. அருணாசலம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (ஐ)

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
DEADLY COMMANDO
பிலிப்பைன்சில் தேர்ச்சி பெற்ற கொமாண்டோ குழு. கொரில்லாக்களுடன் சேர்ந்து, கிளர்ச்சிக்காரர்கள் மீது மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்கள். (மிகப்புதிய வெளியீடு)

நகரத்தில் புதிய படம்
லிபேர்ட்டி மினி
10-30, 2-30, 4-45, 7-00
FINAL MISSION
வயதுவந்தவர்கள் மட்டும்
தன் மனைவியையும், குழந்தையையும் குண்டுவைத்து அழித்த கயவர்களைத் தேடித் திரிந்து தன்னந்தனியனாகச் சென்று கயவர்களை நிர்மூலமாக்கும் சண்டைப்படம். தொடக்கம் முதல் முடிவு வரை நீங்கள் இதுவரை பார்த்திருக்கமுடியாத சண்டைகள் நிறைந்தது.

வெலிங்டன்
10-30, 2-30, 6 30
சிவாஜி - சுமதி நடித்த
சுவரில்லாத சித்திரம்
[கலர்]

ரீகோ சினிமா
10-30, 2-30, 6-30
தியாகராஜன், பூர்ணிமா நடித்த
நீங்கள் கேட்டவை
சண்டைகள் கலர்

சரஸ்வதி
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 6-30
கமலகாசன், ரஜனிகாந், அமிதாப்பச்சன், மாதவி பூனம் தில்லான்
Geraf Taar
V.G.P.
பயங்கர சண்டைகள் சிறந்த பாடல்கள் நடனங்கள்.
இந்தியாவில் 175 நாட்களுக்கு மேல் ஓடியபடம்.

எம்பயர்
(வைத்தீஸ்வரா சந்தி)
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30,
தர்மேந்திரா, ஜித்தேந்திரா, பிரான், ஜீனத் அமன், நீட்டுசிங் நடித்த
"தரம் வீர்"
'ஜீரோ' என்ற பறவையின் சாகசச்செயல்கள்.
பயங்கரச் சண்டைகள், இனிய பாடல்கள்.
குதிரைச் சவாரி, அழகிய நடனங்கள் நிறைந்த புத்தம்புதிய ஹிந்திப் படம்.
இரவு 9-00 மணி
"Uncommon Valour"
(War Flim)

அரசன்னி மினி
5 X 8 திரையரங்கில்
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
Chained Heat
அமெரிக்க பெண்களின் மறியல் வாழ்க்கையை சித்தரிக்கும் படம்.

# ஈழநாடு

THE EELANADU
(NATIONAL TAMIL DAILY)


# மோட்டார் சைக்கிளை விபத்தின் பின் காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். கட்டாதெருச்சந்தியில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்; சம்பவத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளை காணவில்லை.

நாவடியைச்சேர்ந்த இராசநாயகம் பாஸ்கரனின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அன்ரனிமுத்து விசாரணை நடத்தினார். சைக்கிள் ஓடியவருடன் மோட்டார் சைக்கிள், மோதியதாகவும், அப்போது இருவரும் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் மோட்டார் சைக்கிளில் வந்தவர் மயக்கம் தெளியாத நிலையில் மரணமானாரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (க)

---

## கடத்தப்பட்டு 16-வது நாள்
## உருக்கமானவேண்டுகோள்

வீடியோ பிரசாத் நிர்வாகி திரு. சே. இராமநாதன் அவர்கள் 18-9-85ல் கடத்தப்பட்டு இற்றைவரை விடுதலை செய்யப்படவில்லை. கடத்தியவர்கள் மனிதாபிமானமுறையில் அவரை விடுதலைசெய்து எங்கள் துயரத்தை நீக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
இராமநாதன் குடும்பத்தினர்,
(1013) உற்றார், உறவினர், நண்பர்கள்.

---

## முக்கிய வேண்டுகோள்

சகல தூரசேவை லொறி உரிமையாளர்களின் நலன்கள் பாதுகாப்பு கருதி ஒன்றிணைந்த ஒரு சங்கத்தை உருவாக்கும் நோக்குடன் லொறி உரிமையாளர் எல்லோரையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (4-10-85) காலை 10.00 மணிக்கு 153, ஆஸ்பத்திரி வீதி கட்டிடத்தில் ஆலோசனைக்கும், சங்கத்தை நிறுவி அங்கீகாரம் பெறுவதற்கும் கூடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அழைப்புக்குழு

**லொறி உரிமையாளர்கள்.**

மு. விஜயரட்னம்,
153 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

1048

---

## உருக்கமான வேண்டுகோள்
### சகல விடுதலை இயக்கங்களின் கவனத்திற்கு

கடந்த 28-9-85 சனிக்கிழமை இரவு 10 மணியளவில் இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் எனது கணவனை திரு ஏ. நாகேந்திரா (ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளர். தற்சமயம் கொழும்பு (TITO ASIA) நிறுவனத்தில் பணிபுரிபவரும்) கடத்திச்சென்றுள்ளார்கள். இன்றுடன் ஐந்து நாட்களாகிவிட்டது. இதுவரைவிடுவிக்கப்படவில்லை கணவர்சுகயீனமானவர் அவர் ஓர் அப்பாவி எதுவித குற்றமும் புரியாதவர், சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமானமுறையில் கருணைகூர்ந்து அவரைவிடுவிக்குமாறுமிகப்பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி மேர்ஸி நாகேந்திரா
5, சின்னத்து வீதி,
முல்லைத்தீவு.

(1042

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126

# "புலிகளின் சட்டதிட்டங்கள் எனக்குத் தெரியாது"
## வண. சிங்கராயர் சாட்சியம்

(கொழும்பு)

"நீர்வேலிவங்கிக் கொள்ளையும், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதலும் பயங்கரவாதச் செயல்களாகக் கருதப்படுகின்றன; வன்செயல்களுக்கு நான் சாதகமானவன் அல்ல என்றும் நான் அஹிம்சாவாதி எனவும் அதனால் பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரானவன் என்றும் நான் எழுதிக்கொடுத்த அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளேன்"

இவ்வாறு வணபிதா அபரணம் சிங்கராயர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தமக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் நடைபெற்று வருகிறது. எதிர்தரப்பு சட்டத்தரணி திரு. பாலாதப்பு எதிரியை நேற்று மீள் விசாரணை செய்த போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில்; "பயங்கரவாதச் செயல்கள் எனக்கருதப்படும் சாவகச்சேரி, நீர்வேலி போன்ற செயல்களில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் வடக்கின் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் எந்த விதிகளின் கீழ் செயல்படுகின்றன என்பதனை கண்டறிய எனக்கு அக்கறை இருக்கவில்லை. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எந்தவித சட்டதிட்டங்கள் உள்ளன என்பதுவும் எனக்குத் தெரியாது. நீர்வேலியுடன் என்னைச் சம்பந்தப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர் கட்டாயமான முறையில் பணம் வந்ததாக பொலிசார் என்னைக்கொண்டு எழுதுவித்தார்கள்" என்றார்.

---

## ஆலால். தர்மர் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் எம். பி க்களான அமரர்கள் வி. தர்மலிங்கம், மு. ஆலாலசுந்தரம் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக வரும் 6ந் திகதி ஞாயிற்றுக்கிழமை வழக்கம்பரை மோகன்' அரங்கில் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

செல்வி நடா. தமிழரசி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், பிரமுகர்களும், சட்டத்தரணிகளும் உரைநிகழ்த்தவுள்ளனர். பண்ணைக் கல்வி, கலை, கலாசார ஒன்றியம் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

---

## மற்றுமொரு அகதிமுகாம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி, நல்லூர் வீதியில் 'தமிழ் மகளிர் அவையினர்' அகதிமுகாம் ஒன்றை நேற்றுக்காலை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அகதிமுகாமை திருமலையைச் சேர்ந்த அகதிகளான பாஸ்கரன் செல்வமதி தம்பதிகள் திறந்து வைத்தனர். தற்போது இந்த அகதி முகாமில் திருமலையைச் சேர்ந்த சில குடும்பங்கள் தங்கியுள்ளன.

யாழ்ப்பாணம் நோக்கி அகதிகளாக வந்தவர்களை 'தமிழ் மகளிர் அவையினர்' இந்த அகதி முகாமில் வந்து தங்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

---

## 'ஈரோஸ்' கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"பேரன்புமிக்க பெருமக்களே! தயவு செய்து உங்கள் முன் தகுந்த முறையில் அடையாளம் காட்டாத எவருக்கும் தங்கள் வாகனங்களை கொடுத்துதவவேண்டாமென்று பணிவாக கேட்டுக்கொள்கிறோம்", என்ற 'ஈழவர்க்கோர் பகிரங்க வேண்டுகோள்' என்ற தலைப்பில் ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கையொன்றில் அறிவித்துள்ளது.

"அண்மைக் காலங்களில் எமது அமைப்பின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு சில தீய சக்திகள் வாகனங்களை கடத்துவதில் ஈடுபட்டுவருவதை உணரக்கூடியதாகவுள்ளது" என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இப்படியும் ஒரு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டுப் பயணங்களை ஒழுங்கு செய்யும் ஒருவரின் வீட்டினுள் இரவுநேரம் நுழைய முயன்ற ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத கோஷ்டியினர் அவ்விடத்து மக்கள் திரண்டு வந்து எதிர்த்ததால் அங்கிருந்து ஓடிவிட்டனராம்!

கல்வியங்காட்டுப் பகுதியில் வசிக்கும் வெளிநாட்டுப் பயணங்களை ஒழுங்கு செய்கின்ற ஒருவர் வீட்டிலேயே இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் நுழைய முயன்றனர்.

இக்கோஷ்டியினர் மேற்படி நபரின் வீட்டுக்குச் சென்று ஜன்னல் கதவுகளை உடைத்த போது வீட்டிலிருந்த தாயும், பெண்பிள்ளைகளும் கூக்குரலிட்டதாகவும், சத்தம் கேட்டு அயலில் வசிக்கின்ற ஊர்மக்கள் திரண்டு வந்து, அந்தக் கோஷ்டியினரை எதிர்த்துப் பேசியதாகவும் தெரிகிறது.

ஊர்ப்பொதுமக்களை மேற்படி கோஷ்டியினர் துப்பாக்கிகளைக்காட்டி 'சுடுவோம்' என்று எச்சரிக்கை செய்த போதிலும் ஊர்மக்கள் பயப்பாது எதிர்த்து நின்றார்களாம், கடைசியில் எதுவும் செய்யமுடியாத நிலையில் அவர்கள் பின்வாங்கி ஓடிவிட்டார்களாம்.

துப்பாக்கிக் கோஷ்டினர் நுழையமுயன்ற வீட்டில் அச்சமயம் ஆண்கள் எவரும் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

### கொள்ளைக் குற்றச்சாட்டு நபர்——
# மொட்டை அடித்து
## ஊர்வலமாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

பலநாட்களாக இரவு வேளைகளில் திருட்டு வேலைகளில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் மொட்டை அடிக்கப்பட்டு பொதுமக்கள் மத்தியில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு மாதகலில் உள்ள வீடொன்றில் 'அவுட் போட்மோட்டர்' ஒன்றை அந்த நபர் திருடிக் கொண்டிருந்ததாகவும் 'தமிழ் ஈழ ராணுவம்(ரி. ஈ. ஏ.) இயக்கத்தின் இரவுப் பாதுகாப்புச் சேவையினரால் அந்த நபர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அவருக்கு பகிரங்கமாக மேற்குறிப்பிட்ட 'தண்டனை' வழங்கப்பட்டது. (மா)

---

# தார்ப் பீப்பாக்களை
## ஒப்படைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைக்குச் சொந்தமான தார்ப் பீப்பாக்கள் மற்றும் உபகரணங்கள் பாஷையூர் வேலைத்தலத்திலிருந்து இனந்தெரியாதவர்களினால் இரவு வேளைகளில் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகரப் பிரதேச வீதி வேலைகள் செய்வதற்காக மேற்படி வேலைத்தலத்தில் வைக்கப்பட்டிருந்த தார்ப்பீப்பாக்கள் எவ்வளவோ சிரமத்திற்கிடையில் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டன என்றும் எதிர்காலத்தில் அங்கிருந்து தார் கொள்வனவு செய்வது இப்படியான நடவடிக்கைகளினால் பலவித கட்டுப்பாடுகளுக்குள்ளாகலாம் என்றும் அதனால் முழு நகரமுமே பாதிப்புக்குள்ளாகலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

"தார்ப்பீப்பாக்கள் களவு போன காரணத்தால் வீதிகள் செப்பனிடும் வேலைகள் தடைப்பட்டுள்ளன. ஏதாவது வீதி சில முக்கிய காரணங்களுக்காக திருத்தப்பட வேண்டுமென யாராவது கருதினால் அதை எனது நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அவற்றில் நடவடிக்கை எடுக்கப்படும். மாநகர வீதிகள் செப்பனிடும் வேலையை தொடர்ந்து செய்வதற்கு ஏதுவாக மேற்படி தார்ப்பீப்பாக்களை வேலைத்தலத்தில் ஒப்படைத்து ஒத்துழைப்பு நல்கும்படி சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றேன்' என்று யாழ். மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

## மரண அறிவித்தல்
### திருமதி
### இராஜேஸ்வரி கந்தையாபிள்ளை

காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் அமுதா நகைமாளிகை உரிமையாளரின் அன்பு மனைவி திருமதி இராஜேஸ்வரி கந்தையாபிள்ளை 2-10-85-ல் காலமானார். ஈமக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: கந்தையாபிள்ளை 1041